1989 ஏப்ரல் 29] [திரு. எம். முகமது சித்திக்]

வாயு என்ற ஒரு வாயு உலகத்திலேயே—கடற்கரைக் காற்றி லிருந்து வருவது—3 இடங்களில் தான் கிடைக்கிறது என்று அறிஞர்களும், விஞ்ஞானிகளும் கூறுகிறார்கள். அந்த ஓசோன் வாயு அதிகமாக எனது தொகுதியில் தரங்கம்பாடி கடற் கரைக் காற்றில் அதிகமான சதவீதத்தில் இருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள். கடற்கரை காற்றில் ஓசோன் வாயு அதிகமாக இருப்பதால் அதை சுவாசிக்கிற மனிதர்களுக்கு சுவாச சம்பந்தமான வியாதிகள் அதிகம் பாதிப்பது இல்லை என்ப தாக அவர்கள் கூறுகிறார்கள். இது மாதிரி உலகத்திலேயே ஒருசில இடங்களில் தான் உள்ளன என்பதை அவர்கள் கூறு கிறார்கள். அதைப்பற்றிய விவரங்களை இந்த அரசு ஆராய்ந்து தெரிந்து கொள்கின்ற முறையில் தரங்கபாடியை சுற்றுலா மையமாக ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொண்டு சுவாச சம்பந்தமான வியாதிகள் களையப்படும் என்றால் தரங்கம் பாடியில் காசநோய் சிகிச்சை மையம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இங்கே பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

7. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

திரையரங்குகளில் நடைபெறும் முறைகேடுகளைக் களைய அரசு நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையை அவையின்முன் படைப்பார்கள்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள திரை யரங்குகள் கேளிக்கை வரிவிதிப்பு தொடர்பாக இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒன்று அனுமதிச் சீட்டு விற்பனையின் மீது வரி செலுத்தும் வகை. மற்றொன்று ஒட்டுமொத்த வரி (Compounding) செலுத்தும் வகை. சென்னை, மதுரை, கோவை ஆகிய பெரு நகரங் கள், சேலம், திருச்சி, ஈரோடு, வேலூர், தஞ்சாவூர், பொள்ளாச்சி, தூத்துக்குடி, ஊட்டி, திருப்பூர், கரூர், திண்டுக்கல், நாகர் கோவில், திருநெல்வேலி ஆகிய சிறப்பு நிலை நகராட்சிகள், புதுக்கோட்டை, குன்னூர் நகராட்சிகள் மற்றும் கன்டோன் மென்ட் எல்லை ஆகிய இடங்களில் உள்ள திரையரங்குகள் அனுமதிச் சீட்டு விற்பனையின் அடிப்படையில் கேளிக்கை வரி செலுத்துகின்றன. இவை தவிர, பிற பகுதிகளிலுள்ள திரையரங்குகள் ஒட்டுமொத்த வரி (Compouncing) செலுத்துகின்றன.

திரைப்படத் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் திரையரங்கு உரிமையாளர்கள் ஆகிய மூன்று தரப்பினரும் பல கோரிக்கைகளை அரசின் முன் வைத்து தகுந்த நிவாரணங்களை வேண்டியுள்ளனர். அரசும், இந்த மூன்று தரப்பினர்களோடும் கலந்து பேசி உரிய முடிவை எடுக்க ஆவன செய்து வருகிறது. இதற்கிடையே, சில திரையரங்குகள், கள்ள அனுமதிச் சீட்டுகள் விற்பது, நிர்ணயிக்கப்பட்ட விலையை விட பன்மடங்கு அதிக விலைக்கு (flate rate) அனுமதிச் சீட்டை விற்பது, குறிப்பிட்ட பொதுநல நிறுவனங்களுக்கு நிதி திரட்ட நடத்தப்படும் காட்சிகள் என்ற போர்வையில் மிக அதிக விலைக்கு பொது மக்களிடம் அனுமதிச் சீட்டுகளை விற்பது, திரையரங்கு உரிமத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கையை விட மிக அதிகமாக அனுமதிச் சீட்டுகளை வழங்குவது, ரிசர்வ் செய்யப்படும் வகுப்புகளுக்கான அனுமதிச் சீட்டுகளைக் குறிப்பிட்ட கையாட்கள் மூலமாக அதிக விலைக்கு வெளியில் விற்பது, அனுமதிக்கப்பட்ட நான்கு காட்சிகளுக்கு மேலாக பல காட்சிகளை நடத்துவது என்பன போன்ற முறைகேடுகள் செய்வதாக பொது மக்கள் மூலமாக பல புகார்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இதனால் அரசுக்கு வரி இழப்பு மிக அதிக அளவில் ஏற்படுவது மட்டுமின்றி பொது மக்களும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். எடுத்துக்காட்டாக, ஒரு திரையரங்கு, ஒரு காட்சிக்கு தவறான முறையில் 7,000 ரூபாய் வசூல் செய்துவிட்டு, கணக்கில் 1,400 ரூபாய் மட்டுமே வசூலானதாகக் காட்டி, வரி ஏமாற்றம் செய்துள்ளதாகத் தகவல் வந்துள்ளது. இதனால் அரசுக்கு வர வேண்டிய வருவாய் மோசடி மட்டுமல்லாமல் அளவுக்கு மீறி மக்களை அனுமதிப்பதால் பொது மக்களுக்கு சுகாதாரக் கேடும், பாதுகாப்பற்ற நிலையும் ஏற்படுகிறது. எனவே தவறு செய்யும் திரையரங்குகளின் மேற்கண்ட போக்கினை நிரந்தரமாக ஒழிப்பதற்கு வணிக வரித்துறை அலுவலர்கள், காவல் துறையினர் மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் மூலமாக அரசு குற்ற இயல் சட்டப்படி கடுமையான நடவடிக்கைகளை எடுக்க உள்ளது என்றும் இதுபோன்ற முறைகேடுகள் புரியும் திரையரங்குகளின் உரிமங்களும் உடனடியாக ரத்து செய்யப்படும் என்றும் எச்சரிக்கப்படுகிறது. இந்த மோசடிகளைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க ஒரு சிறப்புக் கண்காணிப்புப்படை அமைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முறைகேடுகள் நடைபெறும் திரையரங்குகள் பற்றிய தகவல்களைப் பொதுமக்கள் உடனுக்குடன் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசுக்கும் தெரிவித்து உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.